VAALIPAN MINISTRIES
வாலிபன்
VAALIPAN
SRI LANKA

# வாலிபன்
# VAALIPAN

இதழ் - 53 / வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை / சித்திரை - 2012




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபன்
VAALIPAN

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபன் வாசகர்களுக்கு,

உலகின் பாவம் போக்கும் பலியாக உலகிற்கு வந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. (1 கொரி 1:18).

காரணம், சிலுவை சுமப்பது என்பது விரும்பக்கூடிய ஒன்று அல்ல. அது மிகவும் வேதனையைக் கொடுக்கும். ஜீவனைப் கூட இழக்க நேரிடும் (மத் 16:24, 25 லூக் 9:23, 24).

பலர் இயேசுவைப் பின்பற்ற விரும்புவதுண்டு. எனினும் சிலுவை சுமப்பதை விரும்புவதில்லை (பிலிப் 1:29).

இயேசுவையும் பின்பற்ற வேண்டும். மனித வாழ்வின் நாளாந்த சுமைகளையும் சுமக்க வேண்டும். இதை நான் கூறுமிடத்து பலருக்கு பைத்தியமாய்த் தோன்றுகின்றதா? மறுபடியும் 1 கொரி 1:18 ஐ வாசிப்போம்.

கடந்த மாதம் சபை ஒன்றிணைப்பாளர்களை சந்தித்தோம். இம்மாதம் 16ம் திகதி களுவாஞ்சிகுடி மெதடிஸ்த ஆலயத்திலும், 17ம் திகதி களுதாவளை மெதடிஸ்த ஆலயத்திலும், 18ம் திகதி கல்முனை மெதடிஸ்த ஆலயத்திலும் தென்னிந்தியாவைச் சேர்ந்த **சகோ.நவீன் ஜோசப்** அவர்களின் கூட்டங்களை 'வாலிபன்' ஊழியங்கள் ஒழுங்குபடுத்தியுள்ளது. மாலை 4.30 மணிக்கு குடும்பம் சகிதமாக வந்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

ஜெபத்துடன், கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கும்படி,

*கிறிஸ்துவின் ஊழியத்தில்*
*ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

## கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்....... 23

சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்

ஆவிக்குரிய காரியங்களில் மரித்துப் போயிருக்கும் தேசத்தையும், வெறுமையான சடங்குகளில் அடங்கியிருக்கும் திருச்சபையையும் தட்டி எழுப்பத்தக்கதான ஒரு தீர்க்கதரிசி தேவையாயிருந்தது. கர்த்தருடைய வார்த்தை வெஸ்லி அவர்களுக்கு வந்தது. உடனடியாக இரட்சிக்கப்படும் கொள்கையையும், விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்பது பற்றியும் புதிய விளக்கத்துடன் அழுத்தந்திருத்தமாக போதிக்க ஆரம்பித்தார். ஜெர்மனி தேசத்திலிருந்து திரும்பிய மறுநாளிலேயே ஆத்தும ஆதாயம் செய்யும் ஊழியத்தில் இறங்கிவிட்டார். காரணம், வெஸ்லி அவர்களால் செய்யப்பட்ட ஊழியம், இங்கிலாந்தின் மிஷனரி வரலாற்றின் போக்கையே மாற்றியமைக்கும் பிரதான பாத்திரமாக அமைந்தது என்ற கூற்றில் நிச்சயம் இரண்டு கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது. ஒரே நாளில் மும்முறை வேதாகமத்தை விளக்கிப் போதித்துள்ளார் என்ற குறிப்புரையை “உன்னத வல்லமை” என்ற நூலின் 33ம் பக்கக் குறிப்புரையிலிருந்து கண்டெடுக்கப் பட்டு, வாசகர்களுக்கு கண்ணீர்த் திரையிட சமர்ப்பிக்கப்படுகின்றது.

‘பீட்டர் போலர்’ இங்கிலாந்தை விட்டுப் புறப்படுவதற்கு முன்பாக நடைபெற்றுள்ள முக்கியமான நிகழ்வொன்றை வாசகர்களுக்கு இவ்விடத்தில் தர விரும்புகின்றேன். அது, வெஸ்லி ஐயர் அவர்களால் உருவாக்கப் பட்ட “ஒரு சிறு ஜெபக்குழு” பற்றியதாகும். உண்மையில் ‘வெஸ்லி ஐயர்’ ஆவியானவரால் அபிஷேகிக்கப்படுவதற்கு முன்பாகவே இக்குழுவினர் இங்கிலாந்திலுள்ள ‘பெட்டர்லேன்’ என்னுமிடத்தில் ஒன்றுகூடித் தம்முடைய ஐக்கியத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது. இத்துடன் நின்றுவிடாமல், மிகக் கடினமான, கட்டுப்பாட்டு ஒழுக்க விதிகள் ஒன்பது (09) கொண்ட யாப்பு வரையறை செய்யப்பட்டது. அவை வருமாறு:

1. குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் செய்யும் பொருட்டு யாவரும் வாரத்தில் ஒரு நாள் கூடிவர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


2. கூடி வருகின்றவர்கள் ஐந்து பேர்களுக்குக் குறையாமலும், பத்துப் பேர்களுக்கு அதிகப்படாமலும் சிறுசிறு குழுக்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.
3. தொடர்ந்து அவர்களுக்கேற்பட்ட சோதனைகள் பற்றியும், விடுதலைகளைப் பற்றியும், அதனால் இருதயம் அடைந்த உணர்வுகளைப் பற்றியும் ஒளிவு, மறைவு எதுவுமின்றி தெளிவாகப் பேச வேண்டும்.
4. பிரிக்கப்பட்ட ஒவ்வொரு குழுவும், பிரதி புதன்கிழமை இரவு எட்டு மணிக்கு பாட்டோடும் ஜெபத்தோடும் ஆரம்பித்து முடிக்க வேண்டும்.
5. யாரேனும் புதிதாக இச்சங்கத்தில் சேர விரும்பினால், சங்கத்தில் சேர்வதற்கான காரணம் எதுவெனத் திறந்த உள்ளத்துடன் பேசி வெளிப்படுத்த வேண்டும்.
6. புதிதாக சேரவிரும்புபவரின் பெயரை அறிவிக்கும்பொழுது, கூடியுள்ள மற்ற அங்கத்தவர்கள், அவர் சேரக்கூடாது எனக் கருதினால் அதற்கான எதிர்ப்புக்களைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.
7. நியாயமான எதிர்ப்புகள் அவர்கள் பேரில் இல்லாதுவிட்டால் அவர்கள் அவதானிக்கப்படும் பொருட்டாகத் தனியே புதிதாகச் சேர்பவர்களைக் கொண்ட குழு அமைக்கப்படும். அவர்களுக்கு உதவும் பொருட்டு பழைய அங்கத்தவர் யாரேனும் ஏற்படுத்தப்பட வேண்டும்.
8. இரண்டு மாதகால அவதானத்திற்குப் பிற்பாடு அவர்கள் மேல் எந்தவொரு குற்றமும் காணப்படாத பட்சத்தில், அவர் அங்கத்தவராக முழுமை பெற்றவராகக் கணிக்கப்படுவார்.
9. ஒவ்வொரு மாதமும் நான்காம் சனிக்கிழமை பொதுவான மன்றாட்டு ஜெபம் ஏறெடுக்கும் நாளாகக் கணிக்கப்படும்.

இத்துடன் மேலதிகமாக சேர்க்கப்பட்ட விதிப்புரைகளின்படி ஒவ்வொரு மாதமும் எல்லா அங்கத்தினரும் சேர்ந்து பங்குபெறும்படி "அன்பின் விருந்து" நடைபெற வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக யாரேனும் மூன்றுமுறை எச்சரிக்கப்பட்டும், சங்கத்தின் சட்டதிட்டங்களை மீறி நடந்தால் அவர் சங்கத்தைவிட்டே வெளியேற்றப்படுவார் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இச்சட்டங்களை அவதானிக்கும் எவரும் ஆச்சரியப்படுவார்கள். ஒரு ஜெபக்குழு திறமையாகச் செயற்பட வேண்டுமாயின் அதிலுள்ள அங்கத்தவர்கள் யாவரும் ஒளிவு, மறைவின்றிச் சகலரும் திறந்த மனதுடன் செயலாற்றுவது மிகவும் அவசியமாகும். அவநம்பிக்கையும் ஒற்றுமையின்மையும் சங்கங்களின் அங்கத்தவர்களிடையே தோன்றாமலிருக்க இச்சட்டங்கள் வழி செய்கின்றன. இம்மாதிரியான சங்கங்களும் இங்கிலாந்திற்குப் புதியவையல்ல. வெஸ்லி ஐயரின் காலத்திற்கு முன்பாகவே ஆங்கிலேயத் திருச்சபையில் இம்மாதிரியான சமய சங்கங்கள் இருந்திருக்கின்றன. ஆனாலும் வெஸ்லி ஐயர் அவர்களின் இச்சங்கமோ, முன்னர் செயற்பட்ட அனைத்துச் சங்கங்களைக் காட்டிலும், அனைத்து ஒழுங்குகளிலும் மிகவும் பெயர்பெற்றதாக விளங்கியது என்றால் அது மிகையாகாது.

**(வெஸ்லி மீண்டும் வருவார்...)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவை அனுபவித்த மனிதன்



**சி**லுவையின் பாதையில் இயேசு மொழிந்த இன்னுமோர் வார்த்தையாக "இன்றைக்கு என்னுடனே நீ பரதீசில் இருப்பாயாக!" என்ற வார்த்தை மிகவும் ஆழமான அர்த்தம் நிறைந்த ஒன்றாகும். இதனை லூக்கா 23:43 இல் நாம் காணலாம்.

ஆண்டவர் இயேசுவின் பணிக்ளின் போது புதுமை முக்கியமான ஒரு இடத்தை வகிக்கின்றது. எனினும், புதுமைகளை தன்னுடைய சொந்த பெயர், புகழுக்காக இயேசு எப்போதும் ஆற்றியதில்லை. இயேசுவுக்கு நேரிட்ட சோதனைகளின் போது (மத் 4:1–11) பிசாசு ஆலய உப்பரிகையிலிருந்து குதித்து, அநேகரை மீட்கும் அடையாளமாக புதுமையை பயன்படுத்துமாறு இயேசுவை வேண்டிக் கொண்ட போதிலும் இயேசு அதற்கு இணங்கவில்லை. இப்பேர்ப்பட்ட ஓர் சோதனை மறுபடியும் சிலுவையில் ஏற்படுகின்றது. சிலுவையில் தொங்கிய ஒரு கள்வன் ஏனையவர்களை நோக்கி, "அநேகரை விடுவித்த இவன் இத்தருணத்தில் தன்னை விடுவிக்கட்டும்" என சவால் விடுகின்றார் (23:35). மேலும் அவருடைய மெசியத்துவத்திற்கு சவால் விடுகின்றான். ஒட்டுமொத்தத்தில் இயேசுவின் மீட்புத்திட்டத்திற்கு மாற்றுவழியொன்றை இயேசு கையாளுமாறு பணிக்கின்றார். ஆனால் இயேசுவைப் பொறுத்தவரை மற்றவர்களைத் துன்புறுத்துகின்ற அரசியல் மெசியாவாக தன்னைக் காண்பிக்க விரும்பாமல் மற்றவர்களுடன் தன்னை அடையாளப்படுத்தும் மானிட மகனாகவே தன்னை வெளிப்படுத்துகின்றார் (மாற்கு 10:45).

லூக்கா 23:41 இல் ஒரு கள்வன் இயேசுவை நோக்கி, இந்த மனிதர் எந்தவிதமான தவறுகளையும் செய்யவில்லை எனக் கூறுகின்றார். இவ்வார்த்தை ஓர் நீதிக்கான குரலாகவும், மீட்பிற்கான வாயிலாகவும் காணப்படுகின்றது. இம்மனிதன் உண்மையைக் குறித்து சான்று பகர்கின்றான். உண்மையைக் குறித்து சான்று பகர்வோர் இயேசுவை ஏற்றுக்கொள்கின்றனர் (யோவா 14:6). மேலும் அவர்கள் உண்மையால் விடுவிக்கப்படுகின்றனர் (யோவா 8:28). அதாவது "சத்தியத்தை நீங்கள் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என யோவான் கூறும் வார்த்தை இங்கு நிறைவேறுகின்றது. அதாவது சத்தியத்தை அறிந்த மனிதன் அந்த சத்தியத்தைக் குறித்து சான்று பகர முற்பட்டபோது அச்சத்தியம் அவனை விடுதலையாக்கியது. எனவே, சத்தியத்திற்காக செயற்படுவோர், உழைப்போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் மீட்புத் திட்டத்தில் இணைந்து கொள்கின்றனர். இதன் ஒளியில் இயேசு இவரை நோக்கி, "இன்றைக்கு என்னுடனே கூட நீ பரதீசில் இருப்பாயாக!" என பதிலுரைக்கிறார். (லூக் 28:43).

லூக்கா 23:42 இல் கள்வன் இயேசுவை நோக்கி "நீர் உமது அரசில் வரும்போது என்னை நினைத்தருளும்" என மன்றாடுகின்றார். ஆண்டவர் இயேசு தன்னுடைய பணிகளின் போது பல முறை தன்னுடைய பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் போன்றவற்றைப் பற்றி சீடர்களுடன் பகிர்ந்துகொண்டார் (மாற் 8:30,31, 9:30,31, 10:30,31). எனினும் இயேசுவின் சீடர்கள் இப்போதனையின் ஆழத்தைப் புரிந்துகொள்ளவில்லை. எனவே தான் இயேசுவின் சிலுவை மரணத்தைக் கண்டபோது அவரை மறுதலிக்கவும், அவரை விட்டு ஓடவும் முயற்சித்தனர். எனினும், இக்கள்வனோ இயேசு உயிர்த்தெழுவார் என்ற உண்மையை உணர்ந்திருந்தார். எனவேதான் இயேசுவின் உயிர்ப்புக்குச் சான்று பகர்கின்றார். அதாவது "நீதிக்காக உழைப்போரை கல்லறை கட்டிவைக்கப் போவதில்லை" என அறிக்கையிடுகின்றார். இயேசுவோடு இருந்தவர்கள் அவரைச் சரியாக புரிந்து கொள்ளாதபோதிலும், இயேசுவை தூரத்திலே பின்பற்றிய இவன் மீட்புக்கு உரித்துடையவனாகுகின்றான். எனவே, இயேசுவோடு இருந்தவர்கள் அவரை யாரென்று சரிவர அடையாளம் காண மறுத்தபோது, இம்மனிதனோ அவர் யார் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றார். இந் நிகழ்வு மீட்புச் சரித்திரத்தில் நாம் எவ்வளவு காலம் இயேசுவோடு பயணித்தோம் என்பதைவிட இயேசுவை எவ்வாறு புரிந்துகொண்டு அனுபவித்தோம் என்பதே முக்கியமானதொன்றாகும்.

நற்செய்திகளில் இயேசுவை அனுபவித்து சான்று பகர்ந்தோர் ஏராளமாகக் காணப்படுகின்றனர். எனினும், இவர்களில் இம்மனிதனின் சாட்சி முக்கியமானதாகும். ஏனெனில் இவனுடைய சாட்சி பலரை சிந்திக்க வைத்தது. மேலும் இறுதித் தீர்ப்பு நிகழ்காலத்திற்கு உரிய ஒன்றாகவும் காணப்படலாம் என்பதை உணர்த்துகின்றது. தீர்ப்பு ஆன்மீக வாழ்வில் திருச்சபை சடங்காசாரங்களில் கட்டுப்பாடுகளுக்குள் மாத்திரம் அடங்கிவிடாமல் அதற்கு அப்பாலில் செல்லக்கூடியதொன்று என்பதை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இயேசுவைத் துன்புறும் மக்களுக்குள்ளே காண எம்மை அழைக்கின்றது. ஆலய திரைச் சீலையின் கிழிவு இயேசு அதிகாரத்திற்கு வழங்கும் தீர்ப்பை எடுத்துக் காட்டுகின்றது. இயேசுவுக்கு அளித்த சிலுவை மரணத்திற்குக் காரணமாக இருந்த அரசியலும் மதமும் தீர்ப்புக்கு உள்ளாகின்றன (மாற்கு 3:6). எனவே, சிலுவையில் நடுத்தீர்ப்பு ஆரம்பித்துவிட்டது. அது இன்றும் மக்களை தீர்ப்புக்குள்ளாக்குகின்றது. எனவே இச் சிலுவையில் இயேசு மொழிந்த மீட்பின் திட்டம் துன்பத்தின் வாயிலாக உண்மையை அறிக்கையிடுவ தன் வாயிலாக, அவமானத்தின் வாயிலாக, தீர்ப்பின் வாயிலாக பெறப்படவேண்டியதொன்றாகும்.

**அருட்பணி அருளம்பலம் ஸ்ரீபன்**
இலங்கை இறையியல் கல்லூரி.
பிலிமத்தலாவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வாலிபன்' சபை ஒருங்கிணைப்பாளர் ஒன்றுகூடல்

கடந்த மார்ச் மாதம் 7ந் திகதி எமது வாலிபனின் சபை ஒருங்கிணைப்பாளர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு எமது கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தின் செல்வநாயகம் மண்டபத்தில் இடம்பெற்றது.

வாழைச்சேனை முதல் பொத்துவில் வரையிலான சபைகளைச் சேர்ந்த சுமார் 30 சபை ஒருங்கிணைப்பாளர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றார்கள்.

காலை 9.00 மணிக்கு சகோதரன் டறில் டியூக்கின் ஆராதனை வேளையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் வாலிபன் பற்றிய அறிமுகம், வாலிபனின் நிகழ்வு









அறிக்கை என்பன எமது சபை ஒருங்கிணைப்பாளர்களுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டது.

பின்னர் செய்தி வேளையினூடாக சகோதரன் டானியேல் வழிநடத்தினார். இறுதியாக வந்திருந்த சபை ஒருங்கிணைப்பாளர்களின் கருத்துக்கள் 'வாலிபன்' குடும்பத்தினருடன் பரிமாறிக் கொள்ளப்பட்டு ஜெப வேளையுடன் முடிவுற்றது. இறுதி ஜெபத்திலும் ஆசீர்வாதத்திலும் எமது சபையின் முகாமைக்குரு அருட்திரு.சாம் சுபேந்திரன் அவர்கள் வழிநடத்த மதிய உணவுடன் அன்றைய ஒன்றுகூடல் நிகழ்வுகள் நிறைவுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நிகழ்வுகள் சிறப்புற இடம்பெற உதவிய அனைத்து வாலிபன் பிராந்திய பொறுப்பாளர்களுக்கும், வாழைச்சேனை முதல் பொத்துவில் வரையான சபைகளின் முகாமைக்குருக்களுக்கும், எல்லா வகையிலும் வாலிபனுக்கு ஒத்துழைப்பு நல்கும் எமது







சபை ஒருங்கிணைப்பாளர்களுக்கும் எமது நன்றிகள். எங்களுக்காக யாவையும் செய்து முடித்த எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கே எல்லாத் துதியும், கனமும் மகிமையும் உரித்தாகுக.

**'வாலிபன்' குடும்பத்தினர்.**

## கவிதைப்போட்டி - 37

கீழேயுள்ள வசனத்திற்குப் பொருத்தமான சமகால சிந்தனையோடு 4 வரிகளுக்குள் அடங்கக்கூடிய உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் எதிர்வரும் இதழில் பிரசுரிக்கப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

**"....நான் (கர்த்தர்) உனக்கு இளைப்பாறுதல் தருவேன்...."** (யாத்திராகமம் 33:14)

**இறுதித் திகதி 01.05.2012**

## கவிதைப் போட்டி - 36ல் வெற்றிபெற்ற சிறந்த கவிதை

**"...நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள்..."** (யோவா 15:7)



நிலையற்ற என் வாழ்வில்
நிலையுள்ள உம்மை நான் பற்ற
என்றும் உம் சத்திய வார்த்தைகள்
என்னை சீராய் நடத்திடுமே...


**D.J.ஷரோன்**
தம்பிமுத்து வீதி,
தம்பிலுவில்-02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 52

உருவாக்கம் : J.சேரா




## இடமிருந்து வலம்

01) துதித்தலும் இதுவும் ஒரே வாயிலிருந்து புறப்படலாமா?

04) நல்ல நிலத்தில் விழுந்த விதை ஒன்று நூறாக இது கொடுத்தது (திரும்பியுள்ளது. இறுதி எழுத்தில்லை).

05) எல்லாம் ........................... என்கிறார் பிரசங்கி (திரும்பியுள்ளது).

06) யோவான் தனது 3வது நிருபத்தை இவருக்கு எழுது கிறார்.

07) இது உள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டார்.

08) நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் இது இயேசுவின் மேல் வந்தது (குழம்பியுள்ளது).

11) ஆவியின் கனிகளில் ஒன்று (இறுதி 2 எழுத்துக்களும் இல்லை).

12) உங்கள் இது போதுமென்று இருங்கள் என்று போர்ச் சேவகரிடம் யோவான் கூறினார்.

13) ஆபிராம் பலிபீடம் கட்டின சமபூமி (இறுதி எழுத்து இல்லை).

## மேலிருந்து கீழ்

01) தாவீதின் சகோதரன்.

02) மேதியராஜாக்களில்ஒருவன்.

03) இது இடுகிறவன் தேவனை மகிமைப்படுத்துகிறான் (தலைகீழ்).

05) இது இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கும் (தலை கீழ்).

07) எகிப்திலே யோசேப்பின் காலத்தில் ஏற்பட்டது.

09) நாலாம் ஜாமத்தில் கடலின் மேல் நடந்த இயேசுவைக் கண்ட சீஷர்கள் பயந்து இப்படி எண்ணினார்கள்.

10) அத்திமரம் துளிர்விடாமற் போனாலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என்றவர் (தலைகீழ்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 51 இற்கான விடைகள்

*இடமிருந்து வலம்*

02) துருகம்
04) ளைநா (நாளை)
06) ணபி {பிண(ம்)}
07) சணல்
08) நலம்
11) த்துவி (வித்து)
13) ம்கக்து (துக்கம்)
15) தசமபாக {தசமபாக(ம்)}
16) பல்

*மேலிருந்து கீழ்*

01) களை
02) துலல்ந (நல்லது)
03) ம்ணப (பணம்)
05) நாசரேத்து
09) லஜம் (ஜலம்)
10) பெத்துவேல்
11) த்யுத {யுத்த(ம்)}
12) வினைம (மனைவி)
14) கனி

குறுக்கெழுத்துப் போட்டி 51க்கான சரியான விடை அனுப்பியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி

**P.ஜெயரஞ்சினி**

மெதடிஸ்த ஆலயம், தன்னாமுனை.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 52ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 01.05.2012**

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**ஆசிரியர்,**
**குறுக்கெழுத்துப்போட்டி - 52**
**"வாலிபன்",**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்**
**மட்டக்களப்பு.**



## சிறுவர்களுக்கான
## வினா விடைப் போட்டி இலக்கம் - 44

1) "எனக்குப் பின்சென்று வா" என்று ஆயத்துறையில் இருந்த யாரை இயேசு அழைத்தார்?

..............................................................................................

2) இயேசுவிடம் திமிர்வாதக்காரனை சுமந்துகொண்டு வந்தவர்கள் எத்தனை பேர்?

..............................................................................................

3) நீதிமான்களையல்ல இவர்களையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க இயேசு வந்தார்?

..............................................................................................

4) இயேசு திமிர்வாதக்காரனை குணமாக்கிய அற்புதம் நடந்த இடம் எது?

..............................................................................................

5) ஓய்வுநாள் யாருக்காக உண்டாக்கப்பட்டது என்று இயேசு சொன்னார்?

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வினா விடைப் போட்டி 43 இற்கான விடைகள்

1) சீமோன், அந்திரேயா
2) செபெதேயு
3) குஷ்டரோகி
4) மனந்திரும்புதலை குறித்து
5) நாற்பது

**வினா விடைப் போட்டி 43ல் சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி**

**T.டரனியா**
இல.19, புன்னைச்சோலை வீதி,
அமிர்தகழி, மட்டக்களப்பு.

- இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.
- வினா விடைப்போட்டி 44இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : **01.05.2012**

அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர்,
வினாவிடைப் போட்டி - 44
'வாலிபன்' -
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.

### போட்டி பற்றிய நிபந்தனைகள் :

- 16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
- ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.


# ஆண்டவரின் இரகசிய வருகை

முதல் வருகை முன் அறிவுப்புடன்
ஏழ்மைக் கோலமாய் உருவெடுத்து
தாழ்மையின் ரூபமாய் தயவுடன் மன்னித்தார்
பாரச் சிலுவையில் கொடியவர் பலரை.

இரண்டாம் வருகை எந்த அறிவிப்புமின்றி
பிதாவைத் தவிர பிரிய சுதனும்
அந்த நாளிகையை அறியா வண்ணம்
அதிரடியாக வந்திடுவார் அனைவரும் திகைக்க

அண்ட சராசரங்கள் அனைத்தும் நடுங்க
அதிகாரக் கோலமாய் அரியணை அமர்ந்து
தண்டனைகள் வழங்குவார் பரிசுத்த ஆவியை
நிந்தனை செய்த மானிடர்க்கு

எள்ளி நகையாட எவரும் இல்லை
ஏறெடுத்துப் பார்க்க கண்களுக்கும் இயலாது
தூற்றிய பதரோ அவியா அக்கினியில்
நல்லவைகளோ களிப்புடன் களஞ்சியத்தில்




அசதியாய் இருந்திடாமல் இரகசிய வருகையில்
ஆண்டவர் இயேசுவோடு அனைவரும் இணைந்திட
ஆயத்தமாவோம் ஆத்தும ஆதாயம் செய்வோம்
அண்ணல் காட்டிய அன்பு வழி நின்று.

**பரா**
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 142வது ஆண்டைக் கொண்டாடும் களுதாவளை மெதடிஸ்த திருச்சபை



இலங்கை வரலாற்றில் ஆங்கிலேயரின் வருகையும் அதில் கிறிஸ்தவ மதமும் முக்கியமானவையாகும். 1814ம் ஆண்டில் தான் பிரித்தானியரால் இலங்கைக்கு மெதடிஸ்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையின் கிழக்கு மாகாணத்திற்கு தேவ ஊழியத்திற்காக வில்லியம் ஓல்ட் என்பவரே பொறுப்பாக இருந்தார். இவர் காலத்திலே தான் மட்டக்களப்பில் 1838ம் ஆண்டில் மெதடிஸ்த ஆலயமும் பாடசாலைகளும் அமைக்கப்பட்டன.

மட்டக்களப்பைச் சூழவுள்ள பல இடங்களிலும் தம் தேவ பணியை விரிவுபடுத்த மிஷனரிமார் எண்ணினர். 1865ம் ஆண்டில் மட்டக்களப்புக்கு தெற்கே ஐம்பது கிலோமீற்றர் தொலைவிலுள்ள கல்முனைப் பிரதேசத்தில் தம் பணியை ஆரம்பித்தனர். மட்டக்களப்புக்கும், கல்முனைக்கும் தம் பணிக்காக ஓர் இடத்தைத் தெரிவுசெய்கையில் களுதாவளை கிராமத்தையே தெரிவுசெய்தனர். அக்காலத்தில் இக்கிராமம் இயற்கை சூழல் நிறைந்த பாமர மக்கள் வாழும் கிராமமாக இருந்தது. மரபு ரீதியான பூஜை, மந்திரம் போன்றவையும் நாட்டுக்கூத்து கொம்புமுறி விளையாட்டு போன்ற பாரம்பரிய கலை, கலாசாரம் கொண்டதாக இருந்தது. வெற்றிலைச் செய்கை, வேளாண்மை இக்கிராம மக்களின் பிரதான தொழிலாக இருந்தது. இவர்கள் அறிவு இல்லாத ஜதீகக் கொள்கை கொண்டவர்களாக வாழ்ந்தனர்.

1876ம் ஆண்டில் தான் இக்கிராமத்தில் மிஷனரிமார் கண்ணாயுதபிள்ளை உபாத்தியார் என்பவரின் உதவியால் காணிகளை கொள்வனவு செய்தனர் என அறியக்கூடியதாக உள்ளது.

முதன் முதலாக சமூகப் பணிக்காக சுவிசேஷ குழுவினர் கல்வியை போதிப்பதற்காக இரு பாடசாலைகளை அமைத்தனர். இப் பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று தற்போதைய தேவாலயத்தின் வடக்கேயுள்ள பாதையை அடுத்துள்ள காணியில் அமைந்திருந்தது. இப்பாடசாலை இக்கிராம மக்களுக்கு மாத்திரமன்று வெளியூர் மக்களுக்கும் கல்விபெறக்கூடிய வகையில் அக்காலத்தே விடுதி வசதி கொண்ட பாடசாலையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மற்றப் பாடசாலை களுதாவளையின் தெற்குப் பகுதியில் வேறு ஒரு சமூகத்தினருக்காக 4ம் வட்டாரத்தில் அமைக்கப் பட்டிருந்தது. காலப்போக்கில் இப்பாடசாலையில் கல்விகற்ற மக்கள் சீரான ஒழுங்கு முறையையும் நடைமுறை பாவனைகளையும், பழக்க வழக்கங்களையும் மாற்றி அமைத்துக் கொண்டனர். மேலும் களுதாவளை கிராமத்தின் வாழ்வோட்டத்தின் சீரையும், சிறப்பையும், ஒழுங்கையும், ஒத்துணர்வையும் பண்பெனும் நாகரிகத்தையும் வளர்த்தவர்கள் இங்கு நிலைகொண்டு ஊழியம் செய்த திருச்சபையினரே என்பதை மறுக்கவோ மறக்கவோ முடியாது.


காலப்போக்கில் மிஷனரிமார் தங்குவதற்காக இரண்டு அறைகள் கொண்ட வீடு அதனைச் சுற்றி அமைந்திருந்தது. இதில் மண்டபத்தின் ஒரு பகுதியே ஞாயிறு ஆராதனை செய்வதற்காக பயன்படுத்தப்பட்டதாக அறியக்கூடியதாகவுள்ளது. அக்காலத்தில் களுதாவளை திருச்சபை கல்முனை சேகரத்துடன் இணைந்து செயற்பட்டது. வணக்கத்திற்குரிய யூலியன் போதகர் செல்வி வாபரா *(Babara)* அக்கின்ஸ், வணக்கத்திற்குரிய அருட்திரு. சரணமுத்து வின்சிலோ, இரட்ணராஜா, தம்பிப்பிள்ளை போன்ற வர்களின் வழிநடத்துதலாலேயும் இயேசுவின் வல்லமையினாலும் சபை வளர்ந்தது.

காலப்போக்கில் களுதாவளை கிறிஸ்தவ மக்கள் மாத்திரமன்று களுவாஞ்சிகுடி, பழுகாமம், தேற்றாத்தீவு, குருக்கள்மடம் கிராமத்து மக்களும் அக்காலத்தில் ஆராதனையில் கலந்து வந்தனர். பிற்பட்ட காலத்தில்தான் புதிய ஆலயம் கட்டவேண்டிய தேவை ஏற்பட்டது. 1962ம் ஆண்டில் புதிய ஆலயம் அமைக் கப்பட்டது. சபை உக்கிராணக்காரராக இருந்த திரு.S.D. வேல்முருகு அதிபர் அவர்களின் காலத்திலே கட்டப்பட்டதாகும். இவ் ஆலய அத்திவாரக் கல்லை வணக்கத்திற்குரிய அருள்திரு.L.J.யூலியன் அவர்களே நாட்டினார்கள். 1962ம் ஆண்டு பங்குனி மாதம் 21ம் திகதி இவ் ஆலயமானது மெதடிஸ்த சங்கத் தலைவரான திரு.ஸ்ரண்டி சில்வா அவர்களால் பிரதிஸ்டை செய்யப்பட்டது. பின்னர் சபையாரின் வணக்கத்துக்கு திறந்து வைக்கப்பட்டது.

பிற்பட்ட காலத்தில் சபை இயேசுவின் கிருபையால் வளர்ந்தது. இன்று அருள்திரு.ஜோசப் உதயகுமார் அவர்களால் மிகச் சிறப்பாக வழிநடத்தப் பட்டு வருகிறது. வாலிபர் ஐக்கியம், பெண்கள் சங்கம், ஆண்கள் பாலர் பாடசாலை, வீட்டு ஜெபக் கூட்டம் என்பன நடைபெற்று வருகின்றன.

**C.டானியல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இப்பாரிலே நான் கைவிடப்படாதபடிக்கு

## நீர் வென்றீரோ மரணத்தை...

இன்று எமது கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை விசுவாசமே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அவர் இவ்வுலகில் வந்து எமக்காய் பாடுபட்டு, மரித்து, உயிர்த்தெழுந்து இன்றும் எம்மோடு ஜீவிக்கிறார். யோவான் 3:16 இல் கூறப்படுகிறபடி தம்மை விசுவாசிக்கிற ஒருவரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒவ்வொருவர் மீதும் அன்புகூர்ந்ததினால் சிலுவையைச் சுமந்து, பாடுகளனுபவித்து, மரணத்தை வெற்றி கொண்டார். அவர் ஆக்கினைக்கு உட்பட்டு மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டும் மரணத்தால் இயேசுவை ஆண்டுகொள்ள முடியவில்லை. மாறாக இயேசுகிறிஸ்து மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார் என நாம் பார்க்கிறோம்.

இயேசுகிறிஸ்து ஏன் இவ்வாறு மரணத்தை ஏற்று, அதனை வெற்றி கொண்டார் என நாம் பார்க்கும்போது ஏசாயா 53:5 இன்படி **"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்..."** என்று அந்த வசனம் தொடர்வதை நாம் காண முடியும். ஆகவே, "நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்" என வேதம் கூறுகிறது. இவ்வுலகிலே நாங்கள் ஒவ்வொருவரும் அநாதரவின்றி விடப்படாமலிருக்க வேண்டும் என்பதற்காக இயேசுகிறிஸ்து தனியே விடப்பட்டார். தாகமடைந்தார், பாடுகள் பட்டார், மரணத்தை கடந்து சென்றார். முடிவில் வெற்றியும் கண்டார் என நாம் பார்க்கிறோம்.

உண்மையிலே இயேசு கிறிஸ்து தன் தந்தையின் சித்தத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்தார். ஆனாலும் அவர் கலங்கி, "பிதாவே இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்க சித்தமானால் நீங் கட்டும்" என்று ஜெபித்தார் என வேதம் கூறுகிறது. ஆகவே, இந்த உலகத்தில் இருந்த அத்தனை வேதனைகளையும் ஒரே நேரத்திலே அவர் சகித்தார். எனக்காக, உங்களுக்காக அவர் கிருபையாய் மீட்பை அளிக்க தன்னையே ஒப்புக்கொடுத்து, சிலுவையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி சிறந்தார். அப் 2:24 கூறுகிறது "தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து அவரை உயிரோடு எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது". ஆகவே, மரணத்தையே வென்று வெற்றி சிறந்த நேசர் எம்மோடு இருக்கின்றதினாலே நாமும் இந்த உலகத்தை வெற்றிகொள்ள அழைக்கப்படுகின்றோம். நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பாடுகளின் வழியாய் கடந்து சென்று, வெற்றியின் வழியாய் கடந்து வந்தவர். ஆகவே, எம்மையும் வெற்றியாய் வழிநடத்த வல்லமையுள்ளவர். அதற்கு அவர் எங்களிடம் எதிர்பார்ப்பதெல்லாம் நாங்கள் அவரிலே நிலைத்திருக்க வேண்டும் என்பது மட்டுமே. ரோமர் 6:9,11 இல் இவ்வாறு சொல்லப்படுகிறது. **"மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும்.... தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்".** ஆகவே, அவருடைய மரணத்தின் வெற்றியினாலே நாங்கள் மீட்கப்பட்டிருக்கிறோம். எங்கள் ஜீவனுள்ள நாளெல்லாம் நாங்கள் நீதிமான்களாக நடத்தப்படுவதற்காக அவர் அக்கிரமக்காரரில் ஒருவரைப் போல நடத்தப்பட்டார்.

ஆகவே, அவர் பெற்ற வெற்றியை நாங்கள் இவ்வுலகிலே வாழும் காலம் முழுவதும் பிரயோஜனமாகப் பயன்படுத்த அழைக்கப்படுகிறோம். எங்கள் வாழ்விலே ஆசீர்வாதங்கள் நிலைத்திருப்பதற்காக சாபத்தைத் தன்மீது ஏற்றுக்கொண்டார். ஆகவே, தேவனுக்காய் நாங்கள் ஏதாவது ஒன்றையாவது பிரயோஜனமாய் செய்ய வேண்டும் என்று உந்தித் தள்ளுகிற அன்பினை எங்களுக்குள்ளே அதிகமாய் வளர்த்துக் கொள்வோம். கிறிஸ்துவின் மாட்சிமையான வருகையின் கடைசி காலங்களிலும் எங்களுக்கு வருகிற பாவத்தின் போராட்டங்களிலிருந்து ஜெயம் கொள்ள சிலுவையிலே மரணத்தை வென்ற இயேசுவை இறுகப் பற்றிப்பிடித்துக் கொள்வோம். அவர் எம்மை தன்னுடைய இரு கரங்களாலும் மார்போடு அணைத்துக்கொண்டு எமக்கு வெற்றி தருவார்.

**"மரித்தேன் ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்"**

**- வெளி 1:18**

**ஜெபா பத்மநாதன்**
மெதடிஸ்த ஆலயம், தன்னாமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபவாசித்து ஜெபிப்போம்

**"...நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்..."**

**(எஸ்தர் 4:16)**

எஸ்தர் மொர்தெகாய்க்கு மறுபடியும் சொல்லச் சொன்னது, "நீர் போய் சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து எனக்காக உபவாசம் பண்ணுங்கள். நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம். இவ்விதமாய் சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன். நான் செத்தாலும் சாகிறேன்" என்று சொல்லச் சொன்னாள்.

ராஜமேன்மை கிடைத்திருந்ததால் துணிகரத்தோடு ராஜாவின் முன்னே செல்லலாம் என்று எஸ்தர் நினைக்கவில்லை. ராஜாவின் முன் செல்வதென்பது அந்நாட்களில் இலகுவானதொன்றல்ல. ராஜஸ்திரியாயினும் அது உயிரைப் பணயம் வைக்கும் விடயம். என்றாலும் தன் இனத்திற்கு வரவிருந்த அழிவைக் குறித்து ராஜாவுக்கு தெரியப்படுத்துவது என்ற முடிவுக்கு வந்தாள். அவள் ராஜ சமுகத்திற்குச் செல்ல வேண்டும். அதற்கு அனுமதியும், ராஜாவின் கண்களில் தயவும் கிடைக்க வேண்டும். அதற்காக எஸ்தரும் தாதிமாரும் சூசானில் இருந்த யூதரும் சேர்ந்து மூன்று நாள் உபவாசித்தார்கள். அதன் பயனாக அவள் தைரியமடைந்தாள். தேவ தயவு அவளைப் பெலப்படுத்தியது. எஸ்தர் உபவாசித்தது ராஜாவுக்குத் தெரியாது. ஆனால் ராஜாவின் கண்களில் எஸ்தருக்குத் தயை கிடைத்தது. உபவாசம் என்பது நாம் நினைத்ததைச் செய்வதற்குப் பாவிக்கப்படும் ஆயுதம் அல்ல. ஆண்டவர் சம்மதிக்க வைக்கும் காரியமும் அல்ல. நமது உபவாசம் மனஸ்தாபத்தின் ஒரு தோற்றம். ஜெபத்தில் போராட தைரியமளிக்கும் ஒரு பக்க பலம். நமது சொந்த விருப்பத்தை அல்ல, தேவனுடைய நோக்கத்தைச் செயற்படுத்த அது நமக்கு ஒரு ஊன்றுகோல். எஸ்தர் எல்லோரையும் உபவாசிக்கச் சொன்னதன் மூலம் தன் பயங்கரமான பணிக்காக தேவ தயவை நாடி ஜெபிக்கும்படியே அவள் பணித்தாள். இது பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வழக்கமாயிருந்தது. எஸ்றா *8:21-23* பகுதியை வாசித்துப் பாருங்கள்)



எஸ்தர் உபவாசித்து ஜெபித்தாள். அவளுடைய ஜனம் அழிவினின்று தப்பியது. ஏன் நாமும் உபவாசித்து ஜெபிக்கக்கூடாது? விசுவாசக் கூட்டத்தாராகிய நாம் ஒருவரையொருவர் ஜெபத்தில் தாங்குவதும் உபவாசத்தோடு ஜெபத்தில் தரித்திருப்பதும் நாம் செய்ய வேண்டிய ஒரு பணி. கஷ்டங்களில் நாம் ஒன்றிணைந்து உபவாசித்து ஜெபிப்போம். அப்பொழுது கர்த்தர் நமக்காக வைத்திருக்கும் பெரிய காரியங்களை நிச்சயம் காண்போம். "கர்த்தாவே! கடமைக்காக ஜெபிக்காமல், பிறருக்காக அவர்களின் மீட்புக்காக நானும் உபவாசித்து ஜெபிக்க என்னை உற்சாகப்படுத்தும்".

-ஆமென்.

**R.சிந்துஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித பேசில்

# பெருமை நமக்கு வேண்டாம்



330 - 379

பதவியும், பட்டமும் வாழ்க்கை இல்லங்க. இல்லவே இல்லை. சிலர் பதவி வந்ததும் தங்களையும் மறந்து தங்களோடு இருப்பவர்களையும் மறந்து போயிடுவாங்க.

இப்படியான உலகத்தில் வாழ்ந்தவர்தான் நம்ம புனித பேசில். இவரைப் பற்றிப் பாரத்தால், கல்வியில் கற்று கொடுத்த வர்களை மிஞ்சியவர். பேச்சில் சிறந்தவர். நட்பு பாராட்டுவதில் நல்லுள்ளம் கொண்டவர். சொற்பொழிவாற்றுவதில் சிறந்தவராகக் காணப்பட்ட இவர், நீதிமன்றத்தில் வழக்கறிஞரானார். அவரைத் தேடி புகழும் செல்வமும் வந்து குவிந்தது. பதவிகளும் நண்பர்கள் வட்டாரமும் குவிந்தது. இவரது உண்மையான உறுதியான நண்பனாக பரி.கிரஹெரி காணப் பட்டார்.

பதவி ஆசையில் விழுந்தால் பரிதாபமான நிலைக்குப் போவோம் என்பதை பேசில் உணர பெருமையை வெறுத்தார். தேடிவந்த பதவிகளை உதறித் தள்ளினார். தன்னுடைய செல் வங்கள் அனைத்தையும் ஆண்டவரின் அன்பை மற்றவர்களுக்கு காட்டும்படிக்கும், நோய்வாய்ப் பட்டவர்களுக்கும், அருட்பணிக்குமே கொடுத்தார்.

வழக்கறிஞர் தொழிலை விட்டு துறவறம் மேற்கொண்ட பேசில், ஏழைகளை அணைத் தார். நாள்தோறும் சுவிசேஷம் அறிவித்தார். இவருடைய பிரசங்கத்தைக் கேட்க மக்கள் கூட்டம் கூட்டமாய் வந்தார்கள். அநேகரின் ஆன்மீக வாழ்வை உயர்த்தினார். ஆயிரக்கணக் கானோர் மறுபிறப்படைந்தார்கள்.

நண்பர்களே! இவரைப் போன்று சுயநலம், பெருமை இல்லாமல் கிறிஸ்துவின் அன்பை வெளிக்காட்ட நீ ஆயத்தமா? தாழ்மையுள்ளவனுக்கு தேவன் கிருபை அளிப்பார். புறப்படு, வாழ்ந்து காட்டு....

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **புனித பேசில்** | ஊர் | : | **சிசெரியா** |
| மண்ணில் | : | **330** | நாடு | : | **கப்பதோக்கியா** |
| விண்ணில் | : | **01.01.379** | தரிசனபூமி | : | **சிசெரியா** |

சகோ.சுரேன்

உதவி : மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருளை நீக்கி ஒளியினிடம் சேர்வோம்

சகோ. V. எமிலி

"நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்"
(யோவான் 8:12)

நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் அவசரமான உலகிலே, எமது நாளாந்த காரியங்கள் அநேகமாக நவீன தொழில் நுட்பங்களையே சார்ந்திருக்கும் வேளையில் ஒரு மணிநேர மின்வெட்டு என்பது அந்த முழு நாளையே ஸ்தம்பித மடையச் செய்துவிடுகிறது. சிறு குழந்தை முதல் பெரியவர்கள் வரை சில மணித்தியாலங்கள் இருளில் இருப்பதைக் கூட விரும்புவதில்லை. ஏனெனில் இருள் ஆபத்து நிறைந்ததும், காரியங்களைச் சரியாகச் செய்வதற்குத் தடையாக இருப்பதும், அது உள்ளத்திற்குப் பிரியமில்லாததாக இருப்பதும் ஆகும். எனவே தான் இருளிலிருந்து விடுபட ஏதாவது ஒரு ஒளியை தேடுகிறோம். மாயையான இந்த உலக வாழ்க்கையிலே இருளை வெறுத்து அதை நீக்க ஏதாவது ஒரு செயற்கையான ஒளியை நாடும் மக்கள் மத்தியில் இன்று அவர்களது ஆவிக்குரிய வாழ்வின் நிலை என்ன?

தேவனைப் பற்றி அறிந்திருந்தும், இன்னமும் தங்கள் வாழ்வை இருளின் பிடியில் வைத்திருப்பவர்கள் அநேகர் எம்மைச் சுற்றிலும் இருக்கிறார்கள். 'இருள்' என்பதற்கு முற்றிலும் எதிரானது 'ஒளி'. எனவே ஒளி இருக்கும் இடத்தில் இருள் இருக்க முடியாது. இன்று எமது வாழ்வு முழுமையாக வெளிச்சமாயிருக்கிறதா? அல்லது ஒரு சில பகுதிகளை இருளிடம் ஒப்புக்கொடுத்திருக்கிறோமா?

"பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வந்திருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான்"
– (யோவான் 3:21,22).

மெய்யான ஒளியாக உலகத்திற்கு வந்து, மனுஷரின் பாவங்களுக்காக தன்னை ஜீவ பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்து, மரணத்தை ஜெயித்த, பிதாவினுடைய வலது பக்கத்திலிருந்து எமக்காகப் பரிந்துபேசும் கிறிஸ்துவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசிக்கும் நாம் ஒளியின் பிள்ளைகளாய் உலகுக்கு வாழ அழைக்கப்படுகிறோம். இருளில் இருப்பவற்றை கண்டு கொள்ளவே நாம் வெளிச்சத்தை உடையவர்களாவது அவசியமாகும். வெளிச்சத்திடம் நெருங்க முடியாதவர்களாய் இருளான காரியங்களினால் நிறைந்திருக்கும் எமது நண்பர்கள், குடும்பத்தினர், அயலார் போன்றவர்களை அதனின்று வெளியே எடுத்து வெளிச்சத்தினிடத்திற்கு திருப்ப வேண்டியது தேவனுடைய பிள்ளைகளான எம்முடைய பொறுப்பாகும். அப்படியான இருளின் காரியங்கள் சிலவற்றைச் சிந்திப்போம்.

## 1. மரண இருள்

இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் திசையில் இருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது (ஏசாயா 9:2).

மரணத்தைக் குறித்ததான பயத்தோடு இருப்பவர்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும். பயத்தை நீக்கி ஒளியின் பிள்ளைகளாக மாற்ற அழைக்கப்படுகின்றோம். மரண இருளை விடியற்காலமாக மாற்றும் (ஆமோஸ் 5:8) கர்த்தரிடம் அவர்களைச் சேர்க்க வேண்டும்.

## 2. பாவம், அவிசுவாசம்

அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கும் திரும்பாதபடிக்கு நீ அவர்களுடைய கண்களை திறக்கும் பொருட்டு (அப்... 26:18) அவிசுவாசத்திலும், பாவத்திலும் சிக்குண்டு, இருளில் இருக்கும் மக்களை தேவனைப் பற்றும் விசுவாசத்தை அறியப்படுத்துவதினாலே பாவமன்னிப்பையும், பரிசுத்தமுள்ள வாழ்க்கையையும் காண்பிக்க வேண்டும்.

## 3. கனியற்ற வாழ்வு

கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள் (எபே 5:8-11). அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய கனிகளைக் கொடுக்க முடியாதபடி இருளில் இருப்பவர்களை கர்த்தருக்குள் கனிகொடுக்கும்படி வெளிச்சத்தினிடம் கொண்டுவர அழைக்கப்படுகிறோம்.

## 4. உலகம், உலக நேரம்

இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று, ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களை தரித்துக்கொள்ளக் கடவோம் (ரோமர் 13:12). உலகத்தினால் உண்டானவைகள் மூலமாக வரும் மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை போன்றவற்றால் இருளில் வாழும் ஜனங்களை, உலகத்தை ஜெயித்த பிதாவின் வெளிச்சத்தினிடம் திருப்பி ஒளியுள்ள வாழ்க்கையை காட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்
இவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள்” - ஏசாயா 43:21

# இயேசுவின் முகத்தை தேடி...

## - துதி ஆராதனை மாலை -

❄ கர்த்தரை துதித்துப் பாட

❄ அவருடைய பிரசன்னத்தை உணர

❄ அவருடைய தொடுதலை உணர

❄ அவருக்காய் வாழ அர்ப்பணிக்க



## ஒரு மகிழ்ச்சியின் மாலை

**தேவ செய்தியாளர்கள்**

❄ சகோ.ஜோசப் நவீன்

❄ சகோ.கிறிஸ்டோ இம்மானுவேல்

(சுவிசேஷகர்கள் தென்னிந்தியா)

**16.04.2012 திங்கள் மாலை 4.30**

களுவாஞ்சிகுடி மெதடிஸ்த ஆண்கள் இல்லம்

**17.04.2012 செவ்வாய் மாலை 4.30**

களுதாவளை மெதடிஸ்த ஆலயம்

**18.04.2012 புதன் மாலை 4.30**

கல்முனை மெதடிஸ்த ஆலயம்

தொடர்புகளுக்கு : ........................................ ‘வாலிபன் ஊழியங்கள்’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org